**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**DW2 – OS. No. 250/2017**

2023 ம் ஆண்டு ஜுன் மாதம் 27 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு.மரியதாஷ் வசந்த் | தொழில் : |
| த/பெ. : திரு, அங்கப்பன் | வயது : 36 |
| முகவரி : | |

**பிரதிவாதி தரப்பில் அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் திருப்பூர் பஜார் கிளை State bank of india வங்கியில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கவும் ஆவணங்கள் தாக்கல் செய்யவும் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையில் வங்கிக் கணக்கு எண் 30330861007 எண்ணிற்கான வங்கிக் கணக்கு துவங்கியதற்கான படிவம். Bloom knit finisher நிறுவனத்தின் கூட்டாண்மை பத்திர ஒப்பந்தம் பங்குதாரர்களின் முகவரிக்கான ஆவணம் , அடையாள அட்டை. மாவட்ட தொழில் மையத்தில் பதிவு செய்யப்பட்ட குறிப்பாணை மற்றும் பங்குதாரர் நிறுவனத்தின் வாடகை ஒப்பந்தம் வங்கி கணக்கு துவங்கியது முதல் முடித்தது வரைக்கான வங்கிக் கணக்கு பட்டியல் தாக்கல செய்ய உத்தரவிடப்பட்டு இருந்தது. மேற்படி விவரங்களுக்கான ஆவணங்களின் நகல் தாக்கல் செய்கிறேன். பிரதிவாதி தரப்பில் EX Y1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நிறுவனத்தின் வங்கிக்கணக்கை முடித்ததற்கான கடிதம் தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டு இருந்தது. மேற்படி வங்கிக் கணக்கானது ஆறு மாதங்கள் தான் பயன் படுததப்பட்டது. அதற்கு பின்னிட்டு இயக்கப்படாமல் இருந்ததால் 2021 ல் தன்னிச்சையாக முடிக்கப்பட்டது. எனவே மேற்படி கடிதம் எதுவும் வழக்கு கோப்பில் இல்லை.

மேற்படி கடிதம் இருப்பதற்கு வாய்ப்பில்லை. எனது தரப்பு சாட்சியினை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

**குறுக்குவிசாரணை இல்லை**.

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI

Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2023.06.27 19:20:25 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.